**<u>தேதி - 15-09-2022 Prob.O.P.No.3/2018 எ.சா.1 (லலிதா)</u>**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

29.09.2020 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான. நான் சொல்லி தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டது. தேதி எனக்கு தற்போது ஞாபகமில்லை. சொத்தில் எனக்கு பாகம் வேண்டுமென்று தான் கூறியுள்ளேன். குறிப்பாக எதுவும் கூறியுள்ளேனா என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற காரணத்தை சொல்லி தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 29.09.2020 ம் தேதியன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும் போது இம்மனுவானது நிலுவையில் தான் இருந்து வந்தது என்றும், அதை மறைத்து பொய்யாக வழக்கறிஞர் அனுப்பினேன் என்றால் சரியல்ல. 06.10.2020 ம் தேதியன்று இம்மனுவின் மனுதாரர் வழக்கறிஞர் பதில்அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பியிருக்கலாம். எ.ம.சா.ஆ 3 ஆன ஆவணத்தில் 4 ம் பக்கத்தில் இந்த உயில் சாசனத்தை என் மகள் லலிதா வைத்துக் கொள்ள வேண்டியது. மற்றவர்கள் என் ஆயுசுக்கு பின் public copy வைத்துக் கொள்ள வேண்டியது என கண்டுள்ளது என்றால் சரிதான். உயில் ஆவணம் எழுதியவுடனே என்னுடைய தாயார் உயிலை என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி உயிலானது என்னுடைய ஆலோசனையின் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உயிலை ஜெகதீஸ்சந்திரன் என்பவர் தயார் செய்துள்ளார். ஜெகதீஸ்சந்திரன் என்பவரை விசாரணை செய்தால் உயிலை பதிவு செய்யும் போது நானும், என்னுடைய தாயாருடன் சென்றேனா, இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். உயில் எழுதிய தேதியன்று சி.சி.டி.வி பதிவுகளை பார்த்தால் என்னுடைய தாயாருடன் சென்றேனா, இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். 6 ம் எதிர்மனுதாரரான ரவீந்திரன் என்பவரின் பெயரிலுள்ள சொத்துக்களை பெயர் மாற்றம் செய்ய நான் பத்திரஅலுவலகத்திற்கு சுமார் 6 மாதங்களுக்கு முன்பு சென்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் உயிலானது எனது தந்தை ராசுநாடார் அவர்கள் மனுதாரர், 2, 6 எதிர்மனுதாரர்களுக்கு தனித்தனியாக வீடு கொடுத்து தனியாக உயில் பதிவு

செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னுடைய தகப்பனார் 6ம் எதிர்மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன். குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்துப் பார்க்கப்பட்டு/ சாட்சிக்கு வாசித்துக்காண்பித்து அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்/ கையொப்பமிட்டார்.

முதலாவது கூடுதல்
மாவட்ட நீதிபதி,
மதுரை.